## லாபம் தருவது நாட்டு மாடா.. கலப்பின மாடா?



நாட்டு மாடுகளுடன் முகுந்தன்...



கலப்பின மாடுகளுடன் சிவபாலன்...



பிளாஸ்டிக் கேனில் செங்கல், பிளாஸ்டிக் பை...



காய்கறிக் கழிவுகள்...



இ.எம்... மரத்தூள்...



இயற்கை உரம் தயார்...

நிலமற்ற ஏழை, விவசாயிகளுக்கு இலவச ஆடு, மாடு வழங்கப்படும்' என்று சமீபத்திய தேர்தலின் போது கொடுத்த வாக்குறுதியை, நிறைவேற்றும் வேலைகளை அதிரடியாகத் தொடங்கிவிட்டார் முதல்வர் ஜெயலிலதா. முதல் கட்டமாக அண்ணா பிறந்த நாளான செப்டம்பர் 15 –ம் தேதி... 1,600 கலப்பின ஜெர்ஸி கறவை மாடுகளையும், அதே எண்ணிக்கையிலான ஆடுகளையும் வழங்குவதற்கானப் பணிகள் நடக்கின்றன.

இந்நிலையில், "கறவை மாடு வழங்கும் திட்டத்தில், வெளிநாட்டுக் கலப்பின மாடுகளை வழங்கக் கூடாது. நாட்டு மாடுகளைத்தான் வழங்க வேண்டும்" என்று இயற்கை ஆர்வலர்கள் கோரிக்கைக்

குரல் கொடுக்க ஆரம்பித்துள்ளனர். இந்து முன்னணி அமைப்பாளர் ராம.கோபாலனும் இதே கோரிக்கையை வலியுறுத்தியிருக்கிறார்.

அதேசமயம், " நாட்டு மாடுகளை வழங்குவது லாபகரமாக இருக்காது. வெளிநாட்டு கலப்பின மாடுகள் தான் சரி" என்ற வார்த்தை முன் வைக்கிறார்களள தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக் கழகத் தரப்பினர்.

இங்கே.. "எந்த மாடு லாபமரமாக இருக்கும்? எதை எளிதாக வளர்க்க முடியும்? என்பதைப் பற்றி அலசுகிறார்கள்.

கலப்பின மாடுதான் சரி!

திணடுக்கல் மாவட்டம், நொச்சியோடைப்பட்டி கிராமத்தில் கலப்பின மாடுகளை வளர்த்து வரும் சிவபாலன், "இலங்கையிலிருந்து அகதியா வந்தவன் நான். எங்க நாட்டில் 40 ஏக்கர் நிலத்திற்குச் சொந்தக்காரனாக இருந்த நான். நிறைய மாடுகளையும் வளர்த்துக் கொண்டிருந்தேன். இங்க வந்த பிறகு, மாடுங்க இல்லாம என்னால இருக்க முடியல. உடனே அனுமதி வாங்கி மாடு வளர்க்க ஆரம்பித்துவிட்டேன். போலீஸ் அனுமதியோட முகாமை விட்டு வெளியில் வந்து, நண்பரோட 2,000 சதுரடி இடததில் மாடு வளர்த்துக்கிட்டிருக்கேன்.

எட்ட கலப்பினக் கறைவ மாடுகளும், இரண்டு கன்னுகளும் இருக்கு. மேய்ச்சல் நிலம் கிடையாது. பசுந்தீவனம் சாகுபடி பண்றதுக்கு நிலம் கிடையாது. ஆனாலும். நல்ல முறையில் வளர்த்துக்கிட்டிருக்கிறேன். அடர் தீவனத்தை நானே தயாரித்துக் கொள்கிறேன். பசுந்தீவனத்தையும் வைக்கோலையும் விலைக்கு வாங்கிப் போடுகிறேன். ஒரு நாளைக்கு எட்டு மாடுகள் மூலமாக சராசரியாக 75 லிட்டர் பால் கிடைக்கிறது. ஒரு நாளைக்கு 1,200 வருமானம் கிடைக்கிறது. எல்லாச் செலவும் போக ஒரு நாளைக்கு 400 ரூபாய்க்கு மேல் லாபம் கிடைக்கிறது. நாட்டு மாட்டை விட, கலப்பின மாடு வளர்த்தால் நல்ல லாபம் பார்க்க முடியும்" என்றார்.

காங்கேயம் மாடுகளைக் கொடுக்க வேண்டும்!

'மாடு வழங்கும் திட்டத்தின் கீழ் தமிழகத்தைச் சேர்ந்த காங்கேயம் ரக மாடுகளை கொடுக்க வேண்டும்' என்று அரசிடம் மனு கொடுத்திருக்கிறார் 'சேனாபதி காங்கேயம் கால்நடை ஆராய்ச்சி மைய'த்தின் அறங்காவலரான கார்த்திகேயன். அவர் நம்மிடம், "மேய்ச்சல் நிலங்கள் இருந்தால், தமிழ்நாட்டைச் சேர்ந்த நாட்டு ரக மாடுகளை எந்தச் செலவும் இல்லாமல் வளர்க்கலாம்.

மேய்ச்சலுக்குச் சென்று வந்து வெறும் தண்ணீர், அல்லது தவிடு கலந்த தண்ணீரைக் குடித்து விட்டே இரண்டு முதல் நான்கு லிட்டர் வரை பால் கொடுக்கும். குறைந்தபட்சம் 2 லிட்டர் கொடுத்தாலும், பெரிதாக செலவு இல்லாமலே 60 ரூபாய் கிடைத்துவிடுமே! இதுவே கலப்பின மாடாக இருந்தால்.. 5 லிட்டர் பால் கறக்கும். அதற்கு மேல் கறக்க .. 2 லிட்டர் பாலுக்கு ஒரு கிலோ தீவனம் என்கிற கணக்கில் கொடுக்க வேண்டும். ஒரு கிலோ தீவனத்திற்கு 12 ரூபாய்க்கு மேல் செலவாகும்.

நாட்டு மாடு என்றால், பெரிதாகக் கொட்டகையெல்லாம் போட வேண்டியதில்லை. கலப்பின மாடுகளுக்கக் கண்டிப்பாக அது தேவை. அப்படியெல்லாம் பராமரித்தால்தான் அவை நோய் நொடியில்லாமல் இருக்கும். அத்தோடு, மனிதர்களின் உணவுக்கு நாட்டு மாடுகள் போட்டிப் போடுவதில்லை. ஆனால் மக்காச்சோளம், அரிசிமாவு என மனிதர்களுக்கு உணவாகக் கூடியப் பொருட்கள் தான் கலப்பின மாடுகளுக்கும் உணவாகக் கொடுக்கப்படுகின்றன. எனவே, அனைத்து வகையிலும் நாட்டு மாடுகளே சிறந்தவை" என்றார்.

இந்திய மாடுகளைத்தான் தரவேண்டும்.

தார்பார்க்கர் ரக மாடுகளை வளர்த்து வரும் செங்கல்பட்ட முகந்தன், நாட்டு மாடு வளர்த்தால் நல்ல லாபம் கிடைக்காது என்பது தப்பான அபிப்பிராயத்தை ரொம்ப நாளாகவே நம்ம ஜனங்க மத்தியில் பரப்பி வைத்திருக்காங்க. அதில் துளி கூட உண்மையில்லை. நம்ம விவசாயிங்க நஷ்டப்படுவதற்கு காரணம்  மாட்டோட ரகத்தை வைத்து கிடையாது. விற்பனை முறையால்தான். பாலை  நேரடியாகவோ, மதிப்புக் கூட்டியோ விற்க முன்வராததுதான் காரணம்.

எல்லாருக்கும் நாட்டு மாடு கொடுக்கறது கொஞ்சம் கஷ்டமான காரியம்தான். இந்தியாவிலேயே தார்பார்க்கர், காங்கிரேஜ், சிந்து, கிர் என்று ஏகப்பட்ட நாட்டு ரக மாடுங்க இருக்கு. இந்த மாதிரியான மாடுகள் ஒரு நாளைக்கு 15 லிட்டர் வரைக்கும் பால் கறக்கக்கூடியவை. கொஞ்ச கால அவகாசம் எடுத்து இந்த மாடுகளை வரவழைத்து கொடுத்தால் நல்லா இருக்கும். எங்கயோ இருக்கும் வெளிநாட்டு கலப்பின மாடுகள் கொடுப்பதைக் காட்டிலும்.. இந்தியாவிலேயே இருக்கும்.. நிறைய பால் தரக்கூடிய மாடுகள் கொடுத்தால்.. அந்த ஏழைகளுக்கு அது பலனுள்ளதா இருக்குமே என்றார்.

நாட்டுமாடு தான் நல்ல மாடு!

இந்து முன்னனி அமைப்பின் தலைவர் ராமகோபாலன், இதுபற்றி பேசியபோது, 'பாரம்பரிய் கட்டடங்கள், கலைகள், உணவு முறைகள், விளையாட்டுக்கள் என்றெல்லாம் பாதுகாப்பது போல.. நம் நாட்டோட அடையாளமான நாட்டு மாடுங்களையும் பாதுகாக்க வேண்டியது நம்ம கடமை. நம்ம ஊர் சீதோஷ்ண நிலைக்கு வெளிநாட்டுக கலப்பின மாடுகளெல்லாம் சாபட்டு வராது.

அது உழவிற்கும் பன்படாது. இப்போ இயற்கை விவசாயத்திற்கு அதிகம் பேர் மாறி வருவதால் நாட்டு மாடுகளுக்கு அதிகத் தேவை இருக்கு. ஜீவாமிர்தம், பஞ்சகவ்யா, மண்புழு உரம் இதையெல்லாம் தயாரிக்க நாட்டு மாடு ரொம்ப அவசியம். நாட்டு மாடுங்க குறைச்சலாச் சாப்பிட்டு அதிகம் உழைக்கும் திறனுடையது. அதனால்தான் நாட்டுப் பசுவைக் கொடுக்கணும் என்று வலியுறுத்துகிறோம் என்றார்.

நாம் இறக்குமதி செய்யும் மாடுகளும், கலப்பின மாடுகளும் அதிகமான ரசாயனம் அடங்கின தீவனங்களைச் சாப்பிடுதுங்க. அதனால், அதுங்களோட பாலில் ரசாயனம் கலந்திருப்பதாக ஆய்வு செய்து சொல்லியிருக்காங்க. அதே போல் அந்த மாடுகளோட பாலில் கேசின் ஏ – 1 புரதம் இருக்கு. இந்தப் பாலை சாப்பிடுபவர்களுக்கு மாரடைப்பு, சர்க்கரை வியாதி வருவதற்க்கு வாய்ப்பிருக்கும் என்று கண்டுபிடிச்சிருக்காங்க.

அதேசமயம் நாட்டுமாட்டுப் பாலில் இருக்கும் கேசின் ஏ -2 புரம் ஆபத்து இல்லாததுனும் சொல்லியிருக்காங்க. ஆக, எப்படி பார்த்தாலும் நம்நாட்டு மாடுகளோட பால்தான் தரமானதாக இருக்கு. அதனால் நம்ம நாட்டு இன மாடுகளைத்தான் கொடுக்கணும் என்றார்.

**தொடர்புக்கு**

முகுந்தன், அலைபேசி : 93823 – 37818

கார்த்திகேயன், அலைபேசி : 99944 – 33456

சிவபாலன், அலைபேசி : 98435 – 98332.

**ஆதாரம்** : www.vikatan.com பசுமை விகடன் வெளியிடான தேதி, 10.8.11